ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி



வேணு : 1 அக்டோபர் 1995 கானம் : 3

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 1 அக்டோபர் 1995 கானம் : 3


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | ஸ்ரீ ஸத்குரு தஸகம் | 4 |
| 3. | மாற்றலுக்கு மாற்றல் - தொடர்ச்சி | 6 |
| 4. | ஸ்ரீ குருஜி - 2 | 10 |
| 5. | யுக தர்ம ஸ்தாபகர்கள் - 3 | 17 |
| 6. | மதுரபுரியா! வைகுண்டபுரியா! | 20 |
| 7. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து-4 | 29 |
| 8. | நடக்க இருக்கும் செய்திகள் | 32 |



ப்ரம்மோத்சவ வைபவத்தில் ஸ்ரீ திருமங்கை
ஆழ்வார் உத்சவத்தன்று ஒரு காட்சி

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

*ராகம்: பிலஹரி* *தாளம்: ஆதி*

ஸ்ரீ வன வாஸம் தேஹிமே க்ருஷ்ண
ஸ்ரீதர தாமோதர புவன ஸுந்தர (ஸ்ரீ)

காத்யாயனி ஸோதர ஸ்ரீ க்ருஷ்ண
காளீய நர்த்தன ஸ்ரீ க்ருஷ்ண
கேசி விமர்த்தன ஸ்ரீ க்ருஷ்ண
கோபேச்வர பூஜித ஸ்ரீ க்ருஷ்ண

பாங்கே விஹாரின் ஸ்ரீ க்ருஷ்ண
ப்ரம்மாதி ஸேவித ஸ்ரீ க்ருஷ்ண
பீத துகூலி ஸ்ரீ க்ருஷ்ண
ப்ருந்தா பூஜித ஸ்ரீ க்ருஷ்ண

ராஸ விஹாரி ஸ்ரீ க்ருஷ்ண
ரஸிக சிகாமணே ஸ்ரீ க்ருஷ்ண
ராதா லோலா ஸ்ரீ க்ருஷ்ண
ராஜ கோபாலா ஸ்ரீ க்ருஷ்ண

வம்சீ வட வாஸ ஸ்ரீ க்ருஷ்ண
வம்சீ தர ஹே ஸ்ரீ க்ருஷ்ண
வதனாங்க மோஹன ஸ்ரீ க்ருஷ்ண
வர முரளீ ஸேவித ஸ்ரீ க்ருஷ்ண (ஸ்ரீ)

---

## அட்டைப்பட விளக்கம்

*மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடைபெற்ற 'ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி' ப்ரம்மோத்சவத்தில், மூன்றாவது நாள் சேஷ வாகனத்தில் பெருமாளும், தாயாரும் பவனி வரும் காட்சி.*

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸத்குரு தஶகம்

அபார கருணாஸிந்தும்
க்ஞானதம் ஶாந்த ரூபிணம்
ஸ்ரீ முரளீதர குரும் பூஜ்யம்
ப்ரணமாமி முதான்வஹம் 1

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ரம் தேவம்
யதோக்த ஆஶ்ரம மார்கதா
ஆராத்ய யோக திஷ்டந்தம்
முரளீதரம் தம் உபாஶ்ரயே 2

அகண்ட மண்டலாகாரம்
வ்யாப்தம் யேன சராசரம்
தத்பதம் தர்ஶிதம் யேன
முரளீதரம் தம் உபாஶ்ரயே 3

க்ஞான ஶக்தி ஸமாரூடம்
தத்வமாலா விபூஷிதம்
புக்தி முக்தி பல ப்ரதம்
முரளீதரம் தம் உபாஶ்ரயே 4

கருணாபூர்ண ஹ்ருதயம்
பக்த வாத்ஸல்ய ஜலதிம் ப்ரபும்
மார்க பந்தும் தயாஸிந்தும்
முரளீதரம் தம் உபாஶ்ரயே 5

யஸ்ய ஸ்மரண மாத்ரேண
பாத்ரபேத: ந வித்யதே
ஸமதர்ஶன ஸந்துஷ்டம்
முரளீதரம் தம் உபாஶ்ரயே 6

யஸ்ய ஸ்ரீ சரணாம்போஜ ஸ்மரண மாத்ரேண
மம ஸம்ஸார தாபஸ்து உபஸம்ஹ்ருத:
தமவ்யாஜ க்ருபாஸிந்தும்
முரளீதரமஹம் உபாஶ்ரயே 7

நாஹம் வைதிக ஸம்ப்ரதாய நிபுண:
ஸ்மார்தேஸ்பி மார்கே அக்ஷம:
ஸாக்ஷாத் ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ரஸ்ய
சரணாம் போஜே ந பக்தி லேபே
ஸம்ஸாரார்ணவ வஸன் நிமக்னம் அநிசம்
ஸந்தாப சிந்தாகுலம்
மாம் ஸ்ரீ முரளீதர தேசிகேந்த்ர க்ருபயா
ஸந்தாரய த்வம் ப்ரபோ 8

போ குரோ கிமஹம் வக்ஷ்யே
விதேஹி ஸஹஜாம் க்ருபாம்
அனன்ய ஶரணம் பக்தம்
ரக்ஷமாம் ஶரணாகதம் 9

ந குரோரதிகம் தத்வம்
ந குரோரதிகம் தப:
தத்வ க்ஞானாத் பரம் நாஸ்தி
தஸ்மை ஸ்ரீ குரவே நம: 10

யதோ வாசோ நிவர்த்தந்தே
ப்ரவர்த்தந்தே யத: புன:
தஸ்மை கஸ்மை சிதானந்த
முரளீதராய நம: 11

- உமா மஹேஸ்வரி

## மாற்றலுக்கு மாற்றல் (சென்ற இதழ் தொடர்ச்சி)

பிப்ரவரி மாதம் வேலையில் சேர்ந்த நாள் முதல் எனக்கு எப்படி மூன்று மாதங்கள் கழிப்பது, திரும்பவும் சென்னைக்கு வந்து முன்போல் ஸ்ரீ குருஜியை நேரில் தரிசிக்கும் நாள் என்று வருமோ என்று தவித்துக் கொண்டிருந்தேன். குருஜி என்னிடம் 'இந்த பிரிவு 2-3 மாதங்கள் தானடா, பரவாயில்லை, போயிட்டு வா' என்று சொன்னதை நினைத்துக் கொண்டே எப்படியோ இரண்டு மாதங்கள் கழித்தேன்.

இப்படியிருக்கையில், ஒவ்வொரு நாளும் குருஜியிடமிருந்து கடிதம் வரும் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து போவேன். நம் ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த ஷ்யாம் சுந்தர் கோவைக்கு, அவனுடைய சொந்த விஷயமாக வந்தபொழுது குருஜி சொல்லி என்னை வந்து பார்த்தான். குருஜிக்கு, உன்னுடைய அட்ரஸ் மறந்துவிட்டதாம், அதனால்தான் கடிதம் போடவில்லை என்று சொல்லச் சொன்னதாகச் சொன்னான். எனக்கு ஒரே அழுகை, அழுகையாக வந்தது. உடனே ஸ்ரீ குருஜிக்குக் கோபமாக என்னுடைய அட்ரஸைதான் மறந்திருப்பீர்கள், என்னை மறந்திருக்கமாட்டீர்கள் என்று நினைக்கின்றேன் என்று அழுதுகொண்டே கடிதம் எழுதினேன். அதற்கும் பதில் வரவில்லை.

ஒருநாள் மாலை சுமார் நான்கு மணியிருக்கும். ஆபீஸ் வேலை விஷயமாக வங்கிக்குச் சென்று வேலையை முடித்து வரும்போது ஸ்ரீகுருஜியிடம் பேசலாம் என்ற ஒரு ஆசையினால் அருகாமையில் இருந்த ஒரு STD பூத்துக்குச் சென்றேன். குருநாதர், நமது சத்சங்கத்தில் இருப்பவர்களை அழைத்துக் கொண்டு ப்ருந்தாவனம் யாத்திரைக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்கின்றார் என்பதைத் தெரிந்த நான் குருஜி, ஏன்

என்னை அவருடன் வர அழைக்கவில்லை என்று ஒரே ஆதங்கத்தோடு இருந்த சமயம். குருஜியிடம் போன் பேசும் பொழுது எப்படியும் ப்ருந்தாவனம் பற்றி பேச்சு வரும், குருஜி அழைத்தால் உடனே கிளம்பிவிடவேண்டும் என்று எதிர்பார்ப்போடு போன் செய்தபோது - நல்ல வேளையாக அவர் இருந்தார். தொலைபேசியை எடுத்து "என்னடா, சௌக்கியமா இருக்கிறாயா, உடம்புக்கு ஒன்றும் இல்லையே, நல்ல சாப்பாடு கிடைக்கிறதா".. என்று குருஜிக்கேயுரிய அந்த தனி வாத்சல்யத்தில் என்னைக் கேட்டார்.

"டேய், உனக்கு தெரியுமா, நாங்க எல்லோரும் ப்ருந்தாவனம் போறோம்" என்று அவர் சொன்னபோது... குருஜி என்னை அழைக்கவில்லையே என்று வருத்தமாக இருந்தது. உடனே "அவர் டிக்கட்டெல்லாம் புக் செய்தாகி விட்டது. நாம் இன்னொரு சமயம் போகலாம்" என்றார்.

ஸ்ரீராம நவமி உத்ஸவம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் கொண்டாட இருப்பதால் 3 நாள் லீவ் எடுத்துக்கொண்டு வரச்சொன்னார். ஆபீஸுக்கு வந்து லீவ் அப்ளிகேஷன் எழுதிக் கொடுத்து, அனுமதியும் பெற்ற ஒரு மணி நேரத்தில் சென்னையிலிருந்து என் அண்ணன் போன் செய்து, அப்பாவுக்கு உடம்பு சரியில்லை, ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்யப் பட்டிருப்பதாகவும் உடனே கிளம்பி வந்தால் உதவியாக இருக்கும் என்று சொன்னான். நான் அன்றைய இரவே சென்னைக்குக் கிளம்பி வந்துவிட்டேன். அப்பாவிற்கு, நெஞ்சுவலி இருந்ததால் அருகில் இருக்கும் ஒரு டாக்டரைப் பார்த்தபோது, அவர் அட்வைஸின் பேரில் ஸ்ரீ ராமசந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்பாவிற்கு பை-பாஸ் ஸர்ஜரி உடனே செய்யவேண்டும் என்று டாக்டர் சொன்னபோது எனக்கும் எங்கள் வீட்டில் இருப்பவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. குறைந்த பட்சம் 1.20 லட்சம் ஆகும் என்று கூறினார்கள். நான் சென்னைக்கு வந்த செய்தியையும்,

அப்பாவின் உடல்நிலை பற்றியும் குருநாதரிடம் சொன்னபோது - "நீ உன் அப்பா பக்கத்திலேயே உட்கார்ந்து பார்த்துக்கோ... "பணத்தை பற்றி கவலைப்பட வேண்டாம். நான் வந்து பார்க்கிறேன்." என்று சொன்னபோதுதான் எங்களுக்கு டென்ஷன் குறைந்தது. நடுவில் ஒரு நாள் ஆபீஸுக்குச் சென்று 15 நாள் லீவ் எக்ஸ்டென்ஷன் செய்தேன். குருஜி இரண்டு முறை ஆஸ்பத்திரிக்கு வந்து அப்பாவைப் பார்த்து அனுக்கிரஹம் செய்தார். பணம் தேவைப்பட்டால் உடனே கேட்குமாறு சொல்லி, நிறைய பணமும் கொடுத்தார். குருஜியின் கிருபையால் அப்பாவிற்கு ஆபரேஷன் நல்லபடியாக முடிந்தது.

எடுத்த லீவ் போதாத காரணத்தால் மறுபடியும் லீவ் எக்ஸ்டென்ஷன் செய்ய நினைக்கும் போது, குருஜியை தரிசித்து பிறகு ஆபீஸ் செல்லலாம் என்று சென்றபோது- குருநாதர், 'ஆபீஸில் சொல்லுடா, அப்பாவின் உடல்நிலை இப்படி யிருப்பதால் உன்னுடைய ப்ரஸன்ஸ் (Presence) இங்கு தேவையென்று சொல்" என்றார்.

நான் ஆபீஸுக்குச் சென்று லீவ் எக்ஸ்டென்ஷனுக்கான லெட்டரைக் கொடுத்து, குருஜி எனக்கு சொன்னது போல் அவர்களிடம் டிரான்ஸ்பர் பற்றி கேட்டேன். அதற்கு, அவர்கள் டிரான்ஸ்பருக்கான ஒரு அப்ளிக்கேஷன் எழுதி கொடுக்கச் சொன்னார்கள். ஆனால், உடனே டிரான்ஸ்பர் கிடைக்காது, மூன்று, நான்கு மாதங்களாவது அவகாசம் வேண்டும் என்றார்கள். குருஜியிடம், இதைப் பற்றி திரும்பவும் வந்து சொன்னேன். பிறகு, மாற்றல் எனக்கு தரவில்லை என்றால் வேலையை Resign செய்து விடலாம் என்றிருக்கின்றேன் என்று ஒரு கடிதம் எழுதி என்னுடைய உயர் அதிகாரியிடம் கொடுத்தேன். அவர், நான் கொடுத்த லெட்டரைப் படித்துப் பார்த்து அவசரப்பட்டு ரிஸைன் செய்ய வேண்டாம், அவருடைய மேல் அதிகாரியான E.D.யிடம் இதைப்பற்றி பேசி வருவதாகக் கூறி என்னை அமர்ந்திருக்கச் சொன்னார்.

வெளியில் வந்த அவர் என்னுடைய டிரான்ஸ்பர் அப்ரூவ் (approve) செய்யப்பட்டுவிட்டது என்று சொல்லி உடனே சென்னை தலைமை அலுவலகத்திற்கு ரிப்போர்ட் செய்யும்படி சொன்னார். நான், உடனே கோவையில் உள்ள லாட்ஜை காலி செய்து சென்னைக்கு உத்தியோகம் மாற்றலானேன். இதில், முக்கியமான விஷயம் என்னவென்றால் எங்கள் அலுவலகத்தில் யாராகயிருந்தாலும் குறைந்த பட்சம் 5 வருடமாவது மாற்றப்பட்ட இடத்தில் பணி புரிந்த பிறகே தலைமை அலுவலகத்திற்கு மறுபடியும் மாற்றலாக முடியும். ஆனால் என் விஷயத்தில், குருநாதரின் கிருபையால், அவர் என்னிடம் 2-3 மாதங்களில் வந்துவிடலாம்.'' என்று முன்பு சொன்னது போலவே இரண்டு மாதங்களில் என் அப்பாவிற்கு உதவி செய்வதற்காக சென்னை வந்துவிட்டேன்.

மூன்று மாதங்கள் முடியும் பொழுது என் விருப்பம் போல் சென்னைக்கே வேலை மாற்றமானது. இது, நம் குருநாதரின் பரிபூரண கிருபை மட்டுமேயன்றி வேறொன்றுமில்லை.

**Y.V. சரவண குமார்**

---

*பகவானுக்கு யார் மூலமாக, என்ன கார்யத்தை, எப்படி, எப்பொழுது செய்யவேண்டும் என்று தெரியும். அவனுடைய சரணங்களிலே எல்லா பாரத்தையும் போட்டுவிட்டு, ஸுகமாக வாழ பழகிக் கொள்ளவேண்டும்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# ஸ்ரீ குருஜி - 2

ஸ்ரீ குருஜியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் தன் வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றி, அவர் வாய்முகமாகவே கூறியவற்றை, தொகுத்து எழுதுவதின் தொடர்ச்சி.

**– எஸ். ஜயராம்**

இதையெல்லாம் தவிர பெண்ணையாறு என்ற நதிதான் பிநாகினி என்றும் பெயர் கொண்டது. மஹாபாரதத்தில் அர்ச்சுனன் வந்து இந்த நதியில் ஸ்நானம் செய்ததாக உள்ளது. ஒரு காலத்தில் இங்கு சமண மதம் தழைத்தோங்கி இருந்தது. இந்த நகரத்தை ஆண்டு வந்த சிற்றரசர்களும் சமண மதத்தையே சார்ந்தவராக இருந்துள்ளனர். கடலூருக்கும் பண்ருட்டிக்கும் நடுவில் உள்ள சிவஸ்தலம் திருவதிகை. திரிபுர சம்ஹாரம் நடந்த இடம். அட்டபுரங்களில் ஒன்று. பெரிய சிவலிங்க மூர்த்தி. வீரட்டானேஸ்வரர் என்று பெயர். அம்மன் பெயர், பெரிய நாயகி. இது பெரியதொரு கோயில். சமண மதம் தழைத்தி ருந்ததற்கு அடையாளமாக இன்றும் அந்த கோயிலின் வெளிப் பிரகாரத்தில் மஹாவீரர் சிலை ஒன்று உள்ளது. இந்த கோயிலின் பிரகாரத்தில் சிவலிங்கத்தை கொன்றை மரத்தடியில் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். காற்றில் அந்த கொன்றை புஷ்பங்கள் சிவபெருமான் தலையில் தானாக பொல பொலவென்று விழுவதைப் பார்த்து ரசித்துக்கொண்டே இருப்பேன் நான். யானை வந்து பிரதக்ஷிணம் செய்யும் அளவுக்கு கர்ப்பக்கிரஹத்தில் இடமுண்டு. தஞ்சாவூர் கோபுரத்தின் நிழல் போன்று, இந்த கோயில் கர்ப்பக்கிரஹத்தின் நிழலும் கீழே விழுவதில்லை என்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால் அளவில் சிறியது. என்னுடைய சிறிய தமையனார் சில காலம்

பண்ருட்டியில் இருந்ததால் அடிக்கடி இந்த கோயிலுக்கு சென்று தர்சனம் செய்திருக்கின்றேன். கூட்டமே இருக்காது. அமைதியாக இருக்கும். அடிக்கடி நான் அங்கு பிரகாரத்தில் உட்கார்ந்து தியானம் பழகுவதுண்டு.

இந்த பண்ருட்டிக்கு சமீபத்தில்தான் திருவாமூர் என்ற ஊர் உள்ளது. இங்குதான் அப்பர் என்ற திருநாவுக்கரசர் அவதரித்தார். இவர் ஆரம்பத்தில் சமண மதத்தில் சேர்ந்து, அவர்களுடைய மத நூல்களில் அபார ஞானம் பெற்று விளங்கினார். இவருடைய தமக்கை திலகவதி அம்மையார் வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு இளம் வயதியிலேயே துறவுக் கோலம் பூண்டு திருவதிகையில் வீரட்டானேஸ்வரருக்குத் தொண்டு செய்து வந்தார். தன்னுடைய சகோதரன் சமண மதத்தில் சேர்ந்து விட்டதை நினைத்து வருந்தி, சிவபெருமானிடம் அவரை எப்படியும் தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவருக்கு வயிற்றில் வலி ஏற்பட்டு, எந்த வைத்தியத்திற்கும், சமண மத மந்திர தந்திரங்களும் கட்டுப் படாமல் இருந்தது. அப்பொழுது திருப்பாதிரிப்புலியூரில் உள்ள பாடலீஸ்வரனை தஞ்சம் அடைய, ஆச்சர்யமாக குணம் ஏற்பட்டது. அவரைச் சிவபெருமான் இப்படி ஒரு லீலையைச் செய்து ஆட்கொண்டார். ஆச்சர்யமான பாடல்கள் பல இயற்றியுள்ளார். அவற்றை தேவாரம் தொகுப்பில் காணலாம். சமண மதத்தில் இருந்து சைவ மதத்திற்கு மாறி விட்டதால் கோபமடைந்த அரச[illegible]வருக்கு பலவிதமான இடையூறுகளைக் கொடுத்தான். கருங்[illegible]லில் கட்டி அவரைக் கடலில் விட்டு விட்டான். 'கற்றுணை[illegible] கட்டிக் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயமே' என்று பாட, கல் மிதந்து அவரைக் கரையில் ஒதுக்கி விட்டது. இதற்கு பிரமாணமாக இன்றும் சமீபத்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு கரையேற்றிவிட்ட குப்பம் என்ற பெயர். ஸ்வாமி வருடத்திற்கு ஒரு நாள் அங்கு போவதும்

உண்டு. அதன் பின்னும், ராஜா அவரை சுண்ணாம்புக் கால்வாயில் போட, அங்குதான் 'மாசில் வீணையும் மாலை மதியமும் வீசும் தென்றலும்' என்ற பதிகத்தைப் பாடியது.

திருவஹிந்திபுரம் என்று சொன்னேன் அல்லவா, இந்த ஊரில் தான் சமீப காலம் வரை வாழ்ந்த வாசுதேவ பரப்பிரம்மம் என்ற ராஜகோபால மஹாதேசிகன் என்ற மஹாத்மா, அவதாரம் செய்தது.

நாங்கள் குடியிருந்த இடத்திற்கு மஞ்சக்குப்பம் என்று பெயர். இங்கிருந்து திருப்பாதிரிப்புலியூர் இரண்டு கிலோ மீட்டர் இருக்கும். அங்கிருந்து திருவஹிந்திபுரம் இரண்டு கிலோ மீட்டர் இருக்கும். நாங்கள் குடியிருந்த தெருவின் எல்லையில் ஒரு பிள்ளையார் கோயில் உண்டு. கடலூரிலிருந்து பாண்டிச்சேரி தோராயமாக இருபத்திரண்டு கிலோ மீட்டர் இருக்கும். இந்த ஊரில்தான், வங்காளத்திலிருந்து சிறு வயதிலேயே வாழ்க்கையைத் துறந்து கிருஷ்ண விரஹம் ஏற்பட்டு, பெரிய யோகியாக வாழ்ந்த அரவிந்த மஹரிஷி ஸ்தாபித்த அரவிந்த ஆஸ்ரமம் மிகவும் ரம்யமாக கடற்கரையை ஒட்டி உள்ளது. நான் சிறு வயது முதல் அடிக்கடி தர்சனத்திற்கு செல்வதுண்டு. மனதிற்கு மிகவும் ரம்யமான ஆஸ்ரமம். கடில நதிக்கரையில் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கிப் பிடித்த திருக்கோலத்தில் அனுமார் சந்நிதி ஒன்று உள்ளது. அனுமார் சஞ்சீவி பர்வதத்தை தூக்கிக் கொண்டு செல்லும் காலத்தில், சிறிது நேரம் இங்கு ஓய்வு எடுத்ததாக ஒரு ஐதீகம்.

நாங்கள் இருந்த வீடு மிகவும் பெரியதாக இருக்கும். பழைய கால வீடு போல், பெரிய கூடம், தாழ்வாரம், முற்றம் போன்ற அமைப்புகள் கொண்டது. நான் இருந்த வீட்டின் கூடத்தில் ஆதி சங்கரர் தன்னுடைய நான்கு சிஷ்யர்களுடனும் இருக்கும் ஒரு படமும், காஞ்சி பெரியவாள், புதுப் பெரியவாளுடன் சேர்ந்து இருக்கும் படமும் இருக்கும். சிறு

வயதிலேயே எனக்கு அவ்விரண்டு படங்களின் மீதும் ஒரு இனம் புரியாத பிணைப்பு ஏற்பட்டது. சங்கர ஜயந்தி அன்றும், ஆசார்யாள் ஜயந்தி அன்றும், நான் அந்த படங்களை எல்லாம் துடைத்து சந்தன குங்குமங்கள் இட்டு புஷ்ப மாலைகள் போடுவேன். எங்கள் வீட்டில் ஒரு சாதாரண ஸ்ரீநிவாச பெருமாள் படமும் இருந்தது. மிகவும் சாதாரண படம். குழந்தையாக இருந்த பொழுதிலிருந்து ஸ்ரீநிவாச பெருமாளிடமும் எனக்கு தனிப்பட்ட ஈடுபாடு இருந்து வந்தது. இந்த பெருமாளின் முன்பு என்னுடைய எவ்வளவோ பிரார்த்தனைகள் ஆச்சர்யமாக உடனுக்குடன் பலித்துள்ளன. நான் பெருமாளுக்கு அபிஷேகம் செய்ய ஆசைப்பட்டு கிணற்றங்கரையில் அந்த படத்தை வைத்து பக்கெட் பக்கெட்டாக ஜலம் இழுத்து விடுவேன். வெகு சீக்கிரத்தில் அந்த பெருமாள் படம், நான் இவ்வாறு செய்ததினால், வீணாகிவிட்டது.

நான் குழந்தையாக இருக்கும் பொழுது கண்களை மூடிக்கொண்டு தூங்க ஆரம்பித்தவுடன் அடிக்கடி எனக்கு இரண்டு விஷயங்கள் புலப்படும். இன்றும் எனக்கு அது பசுமையாக நினைவில் உள்ளது. ஒன்று, ஒரு கரிய உருவம் என்னை துரத்த வருவது போல் இருக்கும், பயந்து கொண்டு அலறுவேன். என் தகப்பனார், என்னை தோளில் போட்டுக் கொண்டு சிறிது நேரம் வெளியில் உலவுவார். அடுத்ததாக, நான் இதுவரை பார்த்திராத ஆச்சர்யமான மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் உள்ள ஒரு உலகம். அங்கு அதி ஸௌந்தரியான ஸ்திரீகள் நாம ஸங்கீர்த்தனம் செய்வது போன்ற ஒரு காட்சி.

நான் பிறந்த அன்று தீபாவளி திருநாள், அமாவாசை, சுவாதி நட்சத்திரம், பிலவ வருடம். எனக்கு சுமார் 6 வயது இருக்கும்பொழுதே என்னுடைய தாயார் காலமாகி விட்டார்கள். என் தாயார் காலம் ஆனபொழுது காலை 9.30 மணி இருக்கும். ஆனால், தான் காலம் ஆகப்போவதை முன்கூட்டியே தெரிந்தாற் போல் அன்று என்னை அதிகாலையில் எழுப்பி ஒரு ஸ்லோகத்தை உபதேசமும் செய்தார்கள்.

சிறு வயது முதலே எனக்கு காவி உடையிலே ஒரு தனிப்பற்று இருந்தது. யாராவது சன்யாசிகளைக் கண்டால் அவர்களைப் பின் தொடர்ந்து போய்க் கொண்டே இருப்பேன். இப்படி ஒரு சமயம் ஒரு சன்யாசியை பின் தொடர்ந்து வெகு தூரம் சென்று விட்டேன். பிறகு எப்படியோ வீடு வந்து சேர்ந்தேன். நான் தனியாக இருக்கும் பொழுதெல்லாம் ஒரு பெரிய வேட்டியை சன்யாசிகள் அணிந்து கொள்வது போல் அணிந்து கொண்டு, துணி உலர்த்தப் பயன்படும் கழியைத் தண்டம் போல் கையில் வைத்துக்கொண்டு கண்களை மூடிக் கொண்டு உட்காருவேன். என்னுடைய தகப்பனாரும் எந்த சாதுக்களைக் கண்டாலும், அவர்களை உடனே வீட்டிற்கு அழைத்துவந்து போஜனம் செய்விப்பார். அப்படி அவர்கள் எல்லோரும் வீட்டிற்கு வரும் பொழுது நாமும் இவர்கள் போல் ஆகவேண்டும் என்று ஆசைப்படுவேன்.

எங்கள் வீட்டில் கல் ஆல மரத்தின் அடியில் அமர்ந்த தட்சணாமூர்த்தி படத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு திங்கள் கிழமையும் சோம வார பூஜை என்றும், பூஜையை விரதமிருந்தும் வெகு காலம் செய்து வந்தேன். குழந்தை முதலே என் சகோதரி பாட்டு கற்றுக் கொண்டதால் கேள்வி ஞானத்தால் நானே பாட்டுகளைப் பாடிக் கொண்டு இருப்பேன். எந்த இடத்தில் பஜனையும், கதையும் நடந்தாலும், அங்கு எப்படியாவது போய்விடவேண்டும் என்று தவிப்பேன். வெகு தூரத்தில் இவைகள் நடக்குமானால் என் தகப்பனார் என்னைத் தனியே அனுப்பமாட்டார். என்னுடைய மூத்த தமையனாருக்கு இவற்றில் எல்லாம் ருசி உண்டு. அப்பொழுது அவர் வடலூரில் வேலை பார்த்து வந்ததால், ஞாயிறு மட்டும்தான் வருவார். அவரும் நானுமாக பஜனை, கதைகள் எல்லாவற்றிற்கும் போய் வருவோம். அப்படிப் போய் வந்ததால் வெகு நாட்களுக்கு அந்த பஜனை சப்தமும் என் காதில் ஒலித்துக் கொண்டே இருப்பதைப் பார்க்க எனக்கு ஆச்சர்யமாக இருக்கும். இதில் குறிப்பிட வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், ஒரு சமயம் திருக்கோயிலூர் அருகிலுள்ள தபோவனத்தில் சித்தியடைந்

துள்ள ஸ்ரீ ஞானானந்த ஸ்வாமிகளை தர்சனம் செய்யச் சென்றோம். வெகு ஆச்சர்யமாக அவருடைய உருவமும் அவர் பேசிய பேச்சுக்களும் நான் எவ்வளவு முயன்றும் என்னை விட்டு அகலவில்லை.

திருப்பாதிரிப்புலியூரில் உள்ள பாடலீஸ்வரரையும், கடில நதிக்கரையில் உள்ள அனுமாரையும், திருவஹிந்திபுரத்தில் உள்ள தேவநாத ஸ்வாமியையும் நான் அடிக்கடி சென்று தர்சனம் செய்வதுண்டு. அநேகமாக திருவஹிந்திபுரத்துக்கு எங்கள் வீட்டு அருகாமையில் உள்ள ஒரு மாமியின் துணைக்கொண்டு நானும் என் சகோதரியும் செல்வோம். அப்பொழுது அவர்கள் பெருமாளுக்கு அலங்காரம், செய்யும் விதம், சாமரம் போடும் அழகு, புறப்பாடு செய்யும் அழகு, நடை போடும் அழகு, பின்புற அலங்காரம் எல்லாம் என்னைக் கவர்ந்து விடும். நானும் இப்படியெல்லாம் ஸ்வாமிக்குச் செய்து பார்க்க ஆசைப்படுவேன். நம் சிவன் கோயில்களில் மட்டும் ஏன் இப்படியெல்லாம் செய்வதில்லை என்று நினைத்து ஏங்குவேன். எப்படியோ ராப் பத்து, பகல் பத்து உத்ஸவத்தைப் போய் ஸேவிப்பேன். நான் பத்திரிகை நடத்துவதும், ஸத் ஸங்கம் நடத்துவதும் புதியதல்ல. நான் பள்ளிக்கூடம் படிக்கும் நாளிலேயே ஒரு கையெழுத்துப் பிரதி நடத்தி வந்தேன். 4, 5 மாதங்களுக்கு மேல் அதை நடத்தவில்லை. அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 'மதுரமுரளி' என்னுடைய இரண்டாவது பத்திரிகையாகும். அது போல, என்னுடைய பள்ளித் தோழர்களைச் சேர்த்துக் கொண்டு சனிக்கிழமை தோறும் ஒவ்வொரு வீட்டில் பஜனை செய்வோம். அப்பொழுதே நிறைய பாட்டுகள் எழுதிப் பாடுவேன். ஒவ்வொரு வருடமும் பள்ளி விடுமுறையில் என்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து ஆளுக்குக் கொஞ்சம் காசு போட்டு ராதாகிருஷ்ணர் பொம்மையை வைத்துக் கொண்டு எங்கள் வீட்டின் மாடியில் ராதா கல்யாணம் செய்து விளையாடுவோம்.

நான் வெவ்வேறு கால கட்டங்களில் பல ஸ்வாமிகளை பூஜித்து வந்திருந்தாலும் என்னுடைய அடி மனதில் கிருஷ்ணனிடம் தான் ஈடுபாடு இருந்தது. ஒரு சமயம் என்னுடைய தாயாரிடம், ''இன்று க்ருஷ்ண ஜயந்தி ஆயிற்றே, ஏன் ஒன்றும் செய்ய வில்லை?'' என்று கேட்டேன். அதற்கு எனது தாயார், சாமான் வாங்க ''கையில் பைசா இல்லை'' என்று சொன்னார்கள். நான் உண்டியலில் சேர்த்து வைத்திருந்த காசை எடுத்துக் கொடுத்தேன். அன்று அதை வைத்துக் கொண்டே கிருஷ்ண ஜயந்தியை கொண்டாடினோம். நான் பல கோடிகளை செலவழித்து கோவில் கட்டியிருந்தால் கூட இவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டிராது. அன்று அப்படியொரு சந்தோஷத்தை அடைந்தேன்.

சிறு வயதிலேயே லௌகீக விஷயமான காட்சிகள் பல ஏற்படும். சிறிது காலத்தில் என்னுடைய வாழ்க்கையிலேயோ அல்லது பிறருடைய வாழ்க்கையிலேயோ, அது அப்படியே நிகழ்வதைக் கண்டு, பிரமிப்பாக இருக்கும். இப்படி அநேக விஷயங்களைச் சொல்லலாம். இவற்றில் சிலவற்றை மட்டும் சொல்கின்றேன்.

*(தொடரும்)*

---

*ஒரு மஹாத்மாவிடம், அவர் இட்ட கைங்கர்யத்தை பக்தி சிரத்தையுடன் செய்து வருபவன், தான் ஜபமோ, தியானமோ செய்ய முடியவில்லையென்று வருந்த வேண்டாம். அவன் செய்யும் கைங்கர்யத்திலேயே அது அடக்கம்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# யுக தர்ம ஸ்தாபகர்கள் - 3

## ஸ்ரீ பகவன்னாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

தொடர்ச்சி

ஸ்ரீ ஆத்ம போதேந்திர ஸ்வாமிகள் விச்வாதிகேந்திரர் எனும் பெயரால் புகழ் பெற்றவர். விச்வாதிகேந்திரர் என்றால் உலகிலேயே உன்னதமானவர் என்பதாகும்.

''விக்ஞான வைராக்ய பராத்ம பக்தி
சமாதி பிர்யோதி கதாம் ப்ரபன்ன: ।
விச்வாதிகாக்யாமக மச்ச தேன
குருத்தமம் தம் ப்ரணமாமி மூர்த்னா ॥''

ஸ்ரீ போதேந்திராள் தனது க்ரந்தத்தில் விச்வாதிகேந்திரர் என தன் குருவை போற்றி வணங்கும் போது, க்ஞானம், வைராக்யம் ப்ரேம பக்தி, சமம், தமம் முதலிய குணங்கள் இவற்றால் உயர்ந்த விச்வாதிகேந்திரர் எனும் பெயரை பெற்ற குருநாதனை வணங்குகிறேன் என்கிறார்.

அக்காலத்தில் இருந்த அனைத்து ஜனங்களும் விச்வாதிகேந்திரரது தேஜஸால் ஆட்கொள்ளப்பட்டிருந்தனர். ஸர்வ ஜனங்களும் வர்ணாச்ரம தர்மங்களை செவ்வனே செய்ய இயலாதது கண்டு வருந்திய ஸ்வாமிகள் கருணையுடன் ஸர்வ ஸுலபமான நாம கீர்த்தனத்தை ப்ரசாரம் செய்தார். இதைக்கண்ட சில வித்வான்கள் பொறாமை கொண்டு அவர்களில் ஒருவனைக் கொண்டு பகவன்னாம வைபவம் அர்த்த வாதம் (மிகைப் படுத்திப் பேசுதல்) என்றும், நாம கீர்த்தன வைபவங்களை குறை கூறியும் ஓர் நூல் எழுதச் செய்து அதை ப்ரசாரம் செய்து வந்தனர். ஸ்ரீ பகவன்னாம போதேந்திராள் தனது நாம ஸித்தாந்த க்ரந்தத்தில் இவர்களுடைய துர்வாதங்களை தனது ஸிம்ம கர்ஜனையால் வீழ்த்துகிறார். குரு த்ரோஹிகளுக்கு மீளா நரகமே

கதி என ஸித்தாந்தம் செய்கிறார். ஸ்ரீ விச்வாதிகேந்திர ஸ்வாமிகளோ எதையும் பொருட்படுத்தாது நாமப் ப்ரசாரத்தினால் லோகோத்தாரணம் செய்து வந்தார்.

ஸாதுக்களுக்கு உலகம் முழுதுமே குடும்பம். எந்த ஓர் இடத்திற்கும் ஸமூஹத்திற்கும் சொந்தமானவர்களல்ல. அவர்களது ஒவ்வொரு அங்கத்திலும் அசைவிலும் அன்பும் அருளும் வீசுகிறது. உலகை பாவனமாக்கவே தீர்த்த யாத்ரை செய்கிறார்கள். அவ்விதம் விச்வாதிகேந்திரர் பாரதத்தின் ஹ்ருதய ஸ்தானம் போன்ற காசீ க்ஷேத்ரத்தைக் குறித்து யாத்திரை புறப்பட்டார். பல க்ருஹஸ்த சிஷ்யர்களும், பரிவாரங்களும் உடன் சென்றனர். மட நிர்வாஹத்திற்கு சிலரை நியமித்துவிட்டுப் புறப்பட்டார் ஸ்வாமிகள். நம் புருஷோத்தமரும் குரு விரஹம் தாளாமல் கூடவே புறப்படுகையில் குரு ஸ்வாமிகள் நீ இப்போது உடன் வரவேண்டாம் எனக் கூறிவிட்டார். குருவின் ஆக்ஞையை மீற திறனற்ற இவர் ஸ்ரீ ராகவனால் தடுக்கப்பட்ட பரதாழ்வானைப் போல் திணறினார்.

குரு ஸ்வாமிகள் பல க்ஷேத்ரங்களையும் தரிசித்துக் கொண்டு காசி வந்து தங்கினார். அந்நாளில் காசியில் ஸ்ரீ ந்ருஸிம்மாச்ரம ஸ்வாமிகள் எனும் மஹான் தனது சிஷ்ய பரிவாரங் களைக் கொண்டும், தானுமாக நாம ஸித்தாந்த ப்ரமாணங்களை சேகரித்து அநேக க்ரந்தங்களை நாம ஸித்தாந்த விஷயமாகச் செய்து ப்ரசாரம் செய்து வந்தார். காஞ்சி மடம் ஸ்வாமிகள் வந்திருப்பதை அறிந்த ஸ்ரீ ந்ருஸிம்மாச்ரம ஸ்வாமிகள் அவரை அன்புடன் பரிவாரத்துடன் தனது ஆச்ரமத்திற்கு அழைத்து உபசரித்து வந்தார். அவர் செய்யும் நாம ப்ரசாரத்தையும் ஜனங்களது ஈடுபாட்டையும் பார்த்த விச்வாதிகேந்திரர் தக்ஷிணத்தில் இந்த அளவு நாம ப்ரசாரம் இல்லையே என தாபப்பட்டார். ஆனால் அது தன்னாலாகப் போவதில்லை தனக்கு பின் பீடாதிபதியாக வரப்போகும் புருஷோத்தம னாலேயே நடக்கும் என நிச்சயித்தார். இரண்டு ஸ்வாமிகளும் பல சாஸ்த்ரங்களிலும் தேர்ந்தவர்கள். நாம ப்ரபாவத்தை சாஸ்த்ர ப்ரமாணங்களுடன் அளவளாவி மகிழ்ந்தனர்.

ஸ்ரீ புருஷோத்தமனோ, குருவின் பிரிவு தாளாமல் தன் ஆருயிர் நண்பனான ஞான ஸாகரனுடன் குரு தர்சனத்திற்காக கிளம்பினார். இருவரும் ப்ரதி தினம் லக்ஷத்தொண்ணாயிரம் நாமஜபம் செய்து கொண்டும், கிராமம் கிராமமாக பிக்ஷை எடுத்துக் கொண்டும், ஆத்ம விசாரம் செய்து கொண்டும் பிரயாணம் செய்தனர். அவர்களுக்குள் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். அக்காலத்தில் காஞ்சியிலிருந்து காசி செல்வதனால் கால்நடையாகத் தான் செல்லணும். எவ்வளவோ காடு மலைகளைத் தாண்டிச் செல்லணும். எனவே தெய்வாதீனமாக யாராவது ஒருவர் இறக்க நேரிட்டால் மற்றொருவன் செய்ய வேண்டிய அந்திமக் க்ரியைகளைச் செய்து தானும் உயிர் துறக்க வேண்டும் என நிச்சயித்துக் கொண்டனர். நட்பின் அன்பு தான் எப்படி இருக்கிறது! இரு ப்ரம்மசாரிகளும் சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், பசி, நித்திரை இவற்றைக் கருதாமல் கால்நடையாக அதிவேகமாக குரு தர்சன ஆசையுடன் காசி நோக்கி வந்து கொண்டிருக்கையில் ஞான ஸாகரன் விஷ ஜ்வரத்தால் பாதிக்கப்பட்டு துவண்டான். புருஷோத்தமன் ஸகல ஸேவைகள் செய்து காப்பாற்றி வந்தும் ஞான ஸாகரன் அநித்யமான உடலை நீத்துவிட்டான். புருஷோத்தமனோ மஹா ஞானியாக இருந்தும் ப்ரேமையினால் தாக்கப்பட்டு ஒரு க்ஷணம் தவித்தார். ஈமக் கடனை முடித்தார். பிறகு தீரராக உடன்படிக் கைப்படி உயிர் துறக்க வேண்டும். அதற்குமுன் காசி அருகில் வந்து விட்டதால், குருநாதனிடம் விஷயங்களைக் கூறி ஒரு தரம் கடைசியாக அந்த முகக் கமலத்தையும் தரிசித்து விடலாமெனக் கருதி ஓடோடி வந்து காசியில் குருநாதனின் திருவடிகளில் ஸேவித்தார். குருவும் வாஞ்சையுடன் சிஷ்யனை அள்ளி அணைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. இரு மஹா நதி ஸங்கமம் போல் நிகழ்ந்ததைக் கண்ட ஜனங்களும் பேரானந்தமடைந்தனர்.

*(தொடரும்)*

– பரனூர் ஸ்ரீகாந்த சர்மா

# மதுரபுரியா ! வைகுண்டபுரியா !

'மதுரபுரி' ஆஸ்ரமத்தில் இந்த ஆவணி மாதம் 2-ம் தேதி, (18-8-95) தொடங்கி, இரண்டாம் வருஷமாக ஸ்ரீ ப்ரேமிக வரதனுக்கு ப்ரம்மோத்ஸவம் செய்து நாம் ஆனந்திக்க ஏற்பாடாயிற்று. துர்லபமான மனிதப்பிறவி பெற்ற பயனாக அவனருளால் அவன் தாள் பணிந்து, வருஷத்தில் 10 நாட்களாவது அவன் ஸ்மரணையிலேயே இருக்க ஒரு வாய்ப்புக் கிடைப்பதை நினைத்து எல்லோரும் இந்த நன்னாளை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருப்பது வழக்கம். கோகுலாஷ்டமியன்று தொடங்கி ஜனனோத்ஸவமாக 10 நாள் கொண்டாடப்படுகிறது இந்த விழா. முந்தைய தினமே, கைங்கர்யபரர்களாக சிலர் சென்று வாழை, தோரணங்கள் கட்டி, கோலமிட்டு, மண்டபத்தை வெகு நேர்த்தியாக அலங்கரித்திருந்தனர்.

## 18-ந்தேதி - கோகுலாஷ்டமி

அன்று காலையிலிருந்தே பக்தர் கூட்டம் ஏகமாகக் கூட ஆரம்பித்து மாலைக்குள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கூடிவிட்டனர். இரவு நந்தோத்ஸவத்திற்காக அந்த ஹால் பூராவும் உறிகள் கட்டி, வர்ண ஜலம், சந்தனம், பால், தயிர், வெண்ணை எல்லாம் நிரப்பி வைத்திருந்தனர். நம் குட்டிக் கண்ணனான நந்தகிசோரையும் அலங்கரித்து, பூச்சொறிந்து மிக அழகான முறையில் அலங்கரிக்கப்பட்ட தொட்டிலிலிட்டார்கள்.

அன்று மாலையிலிருந்து தொடங்கி 5 முதல் 6-30 வரை ஸ்ரீ ஸ்ரீகாந்த சர்மா அவர்களின் 'சைதன்ய மஹா ப்ரபு சரித்திரம் உபந்யாஸம் நடந்தது. உபன்யாஸம் முடிந்ததும், பஜனை செய்து, பிறகு ஸ்ரீ குருஜி ராதாகிருஷ்ணனுக்குத் திருமஞ்சனம் செய்து முடித்ததும் நல்ல சிகப்பு ஜரிகை வஸ்திரங்களை தலைப்பாகைக் கட்டிக் கொண்டு நந்தோத்ஸவத்திற்கு

தயாரானார். பக்தர்களின் மன நிலையை விவரிக்க வார்த்தை கிடையாது. அது ஒரு தனி அனுபவம். பெரியாழ்வார் அனுபவித்தது போல் அறிவிழந்தனர் எனலாம். கண்ணன் பிறந்த மகிழ்ச்சியை கோகுலத்துச் சொத்தான பால், தயிர், வெண்ணை கொண்டுதானே தெரிவிக்க வேண்டும்! பெரிய கோலைக் கொண்டு சாலைத் துளைப்பார்! என்று ஊத்துக்காடு கவி அனுபவித்தது போல் ஸ்ரீ குருஜி சில உறிகளிலுள்ள பானைகளை துளைக்க அதிலே கொட்டும் தயிரிலே நனைந்து ஆனந்த பரவசர்களாகி மற்ற சிஷ்யப் பிள்ளைகளும் சாலைத் துளைத்து ஒரே அமளி துமளிதான். ஸ்ரீ குருஜி வெண்ணையை தூக்கி அடிக்க, அது தன் மேல் விழாதா என்று ஏங்கினர் எல்லோரும், பிறகு ஸ்ரீ குருஜி ஆனந்தமாக ஓடி ஆடி உறியடித்த அழகு சொல்லில் அடங்காது. பிறகு நந்தகிசோருக்கு தங்களாலான இனிப்பும் பணமும் கொடுத்து, தொட்டிலை சுற்றி கும்மியடித்து தங்கள் மகிழ்ச்சியை எப்படி தெரிவிப்பதென்று தெரியாமல் திணறினர். இந்த கொண்டாட்டங்கள் முடிந்து இரவு 2 மணியளவில் எல்லோரும் படுக்கச் சென்றோம்.

## 19-ந்தேதி முதல் 22-ந்தேதி வரை

பிரதி தினமும் (பத்து நாட்களும்) காலை ப்ரபோதனம், கோ பூஜை முடிந்து பெருமாள் புறப்பாடு நடந்தது. பக்தர்கள் தங்களை மறந்து பஜனை பாடி திரும்பி வந்ததும் எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டப் பிறகு பஜனை, அஷ்டபதி பாடி, திருமஞ்சனம் முடிந்ததும், தீர்த்தம், திருத்துழாய் பெற்றுக்கொண்டு எல்லோரும் சாப்பிட்டு சற்று விச்ராந்தி எடுத்துக் கொண்டனர். பிறகு மாலை தினமும் ப்ரவசனம் ஆனதும் ஒவ்வோர் வாஹனத்தில் பெருமாள் புறப்பாடு. வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டு பக்கத்து கிராமத்தில் பவனி வந்தான் ஸ்ரீ ப்ரேமிக வரதன். வாஹனங்களும் வெகு அழகு. கிராமத்தில் உலா வரும்போது பாகவதர்களும் உணர்ச்சி மேலிட்டு பாட, எல்லோர் மனமும் உருக, ஸ்ரீ குருஜியும்

பரவசமாகி நர்த்தனம் செய்தார். கிராமங்களில் ஜனங்கள் எவ்வளவு சிரத்தையாக தெருவையே அடைத்து பெரிய பெரிய கோலமிட்டு 'க்ருஷ்ணா வருக,' 'கண்ணா வருக', 'குருஜி வருக', 'வருக ப்ரபு ஸ்ரீக்ருஷ்ணா' என பலவிதமாக எழுதி குத்துவிளக்கேற்றி வைத்து வந்தவர்களுக்குக் குடிக்கத் தீர்த்தமும், சிலர் பாலும் கொடுத்து உபசரித்தனர் என்பதைப் பார்க்கும்போது ஸ்ரீ குருஜியின் மஹிமைதான் அவர்களை அப்படி செய்ய வைத்தது என்பது உறுதி. சிலர் நாற்காலி போட்டு ஸ்ரீ குருஜியை உட்கார வைத்து, வெகு விரிவாக பாத பூஜை செய்து கற்பூர ஹாரத்தி செய்தனர். தேங்காயில் கற்பூரம் வைத்து த்ருஷ்டி கழித்து, நாம் செய்ய நினைத்ததை, செய்துவிட்டார்கள். 5-6 கிலோ மீட்டர் இப்படி பெருமாளுடன் ஊர்வலம் சென்று திரும்பி வந்ததும் டோலோத்ஸவம் செய்து நாமும் உணவருந்தி அன்றைய விழா முடிவுறும்.

## 23-ந் தேதி - கோவிந்த பட்டாபிஷேகம்

ஸ்ரீ க்ருஷ்ணன் கோகுலத்தைக் காத்து, இந்திரனை கர்வ பங்கம் செய்து, அவனால் கோவிந்தன் என பெயரிடப்பட்டு பட்டாபிஷேகம் செய்யப்பட்ட விழா. ஆஸ்ரமத்திற்கு எதிரில் உள்ள மலையை கோவர்த்தனமாக பாவித்து (அதன் பெயர் மதுரகிரி), அங்கு மேள தாளத்துடன் பலவித சித்ரான்னங்கள், திருமஞ்சனத்திற்குத் தேவையான பொருட்கள், பெருமாளின் அலங்காரப் பொருட்கள், குடை இத்யாதி முதலியவற்றை சிஷ்யப் பிள்ளைகள் நிமிஷமாக மலைக்கு மேல் கொண்டு சேர்த்துவிட, ஸ்ரீ குருஜி பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்து பெரிய தலை வாழை இலை போட்டு அதில் சித்ரான்னங்களை முழுக்க பரிமாறி வடை, அக்கார வடிசல் எல்லாம் பரப்பி நிவேதனம் நடந்தது. குருஜி பெருமாளுக்குக் கூடை கூடையாக பூச்சொறிந்தார். தங்கள் பங்குக்கு, பக்தர்கள் எல்லோரும் பூ சேர்த்தனர். மலை உச்சியே பூ மழையால் நனைந்து வண்ண ஜாலத்துடன் திகழ்ந்தது. அங்கு பஜனை செய்து ப்ரஸாத

வினியோகம் முடிந்து திரும்பி ஆஸ்ரமத்திற்கு வந்து சாப்பிட்டோம். அன்றிரவு யானை வாஹனம். வெள்ளை வெளேர் என்ற மிக அழகிய யானையைப் பார்த்தால், இந்த்ரனே தன் ஐராவதத்தை அனுப்பினானோ என்பது போல் இருந்தது.

## 24-ந் தேதி - திருமங்கை ஆழ்வார் உற்சவம் - வேடுபறி

வழக்கம்போல் காலை பஜனை முதலிய நிகழ்ச்சிகள் முடிந்ததும் இரவு வேடுபறி உற்சவம் நடத்த சிலர் வேஷமிட்டு ஒத்திகை பார்த்தனர். நம் ஸாந்தீபனி குருகுல குழந்தைகளை அழைத்து வந்திருந்தார் ஸ்ரீ குருஜி. திருமங்கையாழ்வார் மற்றும் அவரைச் சேர்ந்தோர் தீவட்டி ஏந்தி முன்கூட்டியே மலை அடிவாரத்திற்குச் சென்று மறைந்திருந்தனர். குதிரை வாஹனத்தில் பெருமாளுடனும் பக்தர்களுடனும் ஸ்ரீ குருஜி பஞ்ச கச்சம், ஜரிகை, உத்தரீயம், வங்கி, மெட்டி மற்றும் பல நகைகளணிந்து புறப்பட்டபோது, திடீர் என்று கொள்ளைக் கூட்டத்தினர் தீவட்டி, கத்தி ஏந்தி 'டேய்! யாரு நில்லு!' என்று கத்தவும், குருஜியும் பெருமாளுடன் 3 சுற்று ஓட இதைப்பற்றி அறியாத பக்தர்களும், பாடசாலைச் சிறுவர்களும் உண்மை யாகவே ஏதோ கலவரம் என்று நடுநடுங்கி விட்டனர். ஸ்ரீ கல்யாண க்ருஷ்ணன்தான் கலியன் வேஷமேற்றிருந்தார். அவர் பெருமாளை அதாவது குருஜியைப் பார்த்து கீழ் வருமாறு ஸம்பாஷணை செய்கிறார்.

கலியன் : ''யார் நீ ! எங்கிருந்து வருகிறாய்? பெயர் என்ன? எந்த ஊர்?''

குருஜி : ''எல்லா ஊரும் என்னுடையதுதான். போக்கும் வரவும் எனக்கேது? எனக்கு ஆயிரம் பெயர் உண்டு. எதைச்சொல்ல! உலகத்திலேயே பெரிய வீடு என்னுடையது.''

கலியன் : ஊம். நகைகளையெல்லாம் கழற்றிக்கொடு.

குருஜி : நான் இப்போதுதான் மணம் செய்து கொண்டு வருகிறேன். என்னை ஏன் மிரட்டுகிறாய்?

கலியன்: ''பார்த்தால் நல்ல பணக்காரனாக இருக்கிறாய்! என்ன தொழில் செய்கிறாய்!''

குருஜி: ''தொழில் செய்கிறேன். உயர்ந்த பொருள்தான். ஆனால் வியாபாரம் ஒன்றும் ஸுகமில்லை. நான் கொடுக்கும் விலை மதிப்பற்ற பொருளை வாங்குபவர் சிலரே''

கலியன்: சரி, சரி, கழற்று நகைகளையெல்லாம்.

குருஜி நகைகளை ஒவ்வொன்றாகக் கழற்றிக் கொடுத்தவுடன், மூட்டையாகக் கட்டி வைத்துவிட்டு, ஓஹோ, காலில் மெட்டி இருக்கே, அதையும் கொடு என்கிறான் கலியன். குருஜி 'நீயே கழற்றிக் கொள்' என்று சொன்னதும், கலியனால் கழற்ற முடியாமல், வாயால் கடித்துக் கழற்ற முனைய, தெரிந்தோ தெரியாமலோ பெருமாள் பாதத்தில் விழுந்ததால், க்ருபைக்கு பாத்திரமாகிறான். இதற்குள், மற்ற திருடர்கள் மூட்டையைத் தூக்க நினைத்து, முடியாமல் போகவே, பெருமாளிடம் கலியன், 'நீ ஸாதாரண ஆள் இல்லை. மந்திரவாதியா! ஸித்த புருஷனா! என்ன மந்திரம் வைத்திருக்கிறாய் இந்த மூட்டையைத் தூக்க முடியாமல் செய்ய' என்று கேட்டதும், 'வா! உனக்கும் சொல்லித் தருகிறேன்' என்று காதில் ''ஓம்! நமோ நாராயணா'' என்று உபதேசித்ததும், ஞானம் உண்டாகி, கலியன் திருமங்கை ஆழ்வாராக மாறிவிடுகிறார். உடனே அஷ்டாக்ஷரத்தின் பெருமையை விவரிக்கும் 10 பாசுரங்களைப்பாடி ஸேவித்தது அருமை.

## 25-ந்தேதி - நிகுஞ்ஜோத்ஸவம்

தினமும் பலத்த மழை பெய்த போதிலும் புறப்பாடு முதலிய உத்ஸவங்களுக்கு இடையூறு இல்லாமலே பெய்தது மிக அதிசயம். எனினும் தோட்டத்தில் நிகுஞ்சம் அமைக்க சிரமமாகி விட்டபடியால் ஆச்ரமத்திலேயே சித்ரா, சாந்தி ஸஹோதரிகள் மிக நளினமாக பாவபூர்வமாக நடனமாடினார்கள். தேர்ந்தெடுத்த பாட்டுக்களும், ஊத்துக்காடு முதலிய க்ருதிகளானதால் அதன் அர்த்தத்திலும் பாவத்திலும் சொக்க வைத்தது நடனம்.

## 26-ந்தேதி - ஜானவாஸம்

ஜானவாஸத்திற்கு கருடாருடனாக பெருமாள் 'ஜில்'லென்று கிளம்பிவிட்டார். பக்தர்களும் பாகவதர்களும் பரவசர்களாகி, லயித்து, பாடி, கொஞ்ச தூரம் ஊர்வலம் சென்று வந்தனர். ஸ்ரீ மாதுரிஸகி மாப்பிள்ளையை எதிர்கொண்டு வர பெருமாள் ஒய்யாளி முதலிய பல கதிகளில் வந்து மாலை மாற்றி பச்சைப் பிடி சுற்றி, பால் பழம் அருந்தி, மனமகிழ்ந்தனர் திவ்ய தம்பதியர். பிறகு நல்ல கல்யாண சாப்பாடு சாப்பிட்டு இரவு விடிய விடிய திவ்ய நாமம். 50, 60 பேர் ப்ரதக்ஷிணத்தில் கலந்து கொண்டு சுற்றி வரவே இடம் இல்லாத அளவுக்கு உத்ஸாஹம் எல்லோருக்கும். ஸ்ரீ குருஜி ஆடாதாரை ஆட வைத்தும், பாடாதாரை பாட வைத்தும், விந்தைகள் புரிந்தார்.

## 27-ந்தேதி - ராதா கல்யாணம்

விடியற்காலை தொடர்ந்தாற் போல் எல்லோரும் ஸ்நானம் செய்து சிற்றுண்டி அருந்தி 7 மணிக்கு உஞ்சவ்ருத்தி பஜனை முடிந்து ராதா கல்யாணம் ஆரம்பமாகியது. மீதமிருந்த அஷ்டபதி பாடி, லக்னாஷ்டகம் சொல்லி ப்ரமாதமாக கல்யாணம் நடந்தது. வந்திருந்தோர் அத்தனை பேருக்கும் ரவிக்கைத் துணி, வெற்றிலை பாக்கு, மற்றும் மங்கள த்ரவ்யங்கள் கொடுக்கப் பட்டன. பிறகு சாப்பாடாகி, கல்யாணம் நடந்த வீடாக எல்லோரும் விச்ராந்தி செய்து கொண்டனர்.

மாலை, ஆஸ்ரமத்தில் உள்ள தடாகத்தில் Search light போடப்பட்டு, தெப்பத்தில் பெருமாள் ஆனந்தித்தார். நாம ஸங்கீர்த்தனமும் பஜனையும் எவ்வளவு செய்தாலும், அலுக்காமல் பாடிக் கொண்டே இருந்தோம். பிறகு டோலோத்ஸவம் முடிந்து படுக்கச் சென்றோம்.

## 28-ந்தேதி - விடையாற்றி உத்ஸவம்

காலை, 1 மைல் தூரத்திலுள்ள குளத்தில் பெருமாளை நீராட்டி, குருஜி தீர்த்தவாரி செய்தார். 'ஜய் ஜய் கோவிந்த' கோஷத்துடன் திரும்பவும் ஆஸ்ரமம் வந்தோம். அங்கு எல்லா

தோஷத்தையும் நிவர்த்தி செய்ய, தர்ப்பையை எரியவிட்டு, அந்தப் புகையை பெருமாளுக்குக் காட்டி சுத்தமாக்கி பிறகு பூஜை செய்து 10 நாள் உத்ஸவத்திற்குப் பிறகு பெருமாள் நிதானமாக சொக்கட்டான் ஆடினார். லேஹியமும், மிளகு குழம்பு சாதமும் நிவேதனம் செய்யப்பட்டு ப்ரம்மோத்ஸவம் முடிவுக்கு வந்தது.

**முடிவுரை :**


உத்ஸவத்தில், சமையற் கட்டைக் கவனித்துக் கொண்டு பிள்ளைகள் மிகுந்த பொறுமையுடனும் அலுப்பில்லாமலும் இன்முகத்துடனும் செயல்பட்டனர். தினம் விதவிதமான சாப்பாடு எல்லோரையும் திக்குமுக்காட வைத்தது. அனைவரும் பல விதத்தில் கைங்கர்யத்தில் ஈடுபட்டனர்.

ஸ்ரீ ஸ்ரீகாந்த சர்மாவின் ப்ரவசனம் மிக எளிமையான நடையிலும், கருத்துக்கள் மனதில் ஆழப் பதியும் வண்ணமும் இருந்தது. நேரமின்மை காரணமாக மஹாப்ரபுவின் 'நவத்வீப' லீலை மட்டும்தான் ச்ரவணம் செய்ய முடிந்தது. அந்தப் ப்ரேமையையே புரிந்து கொள்வது கடினம்தான். அதையும் புரியும்படி சொன்னது ரஸிக்கத் தக்கதாக இருந்தது. ஸ்ரீ முல்லைவாசல் க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் மிக அனுபவிக்கும்படியாக பகவத் குணம் சொன்னார்.


இப்படி, பத்து நாட்களும் கோலாஹலமாக ப்ரமோத்சவம் நடந்த **'மதுரபுரி'** ஆஸ்ரமம், எல்லோர் கண்களுக்கும், மனத்திற்கும் **'வைகுண்டபுரி'**யாகவே காட்சியளித்தது.

இவ்வளவு ராஸிக்ய ஹ்ருதயத்துடன் ஸ்ரீ குருஜி ஒருவரால்தான் இப்படிப்பட்ட ப்ரம்மோத்ஸவம் நடத்த முடியும் என்பது உண்மை. கூடவே, 'விடையாற்றி' என்று ஒன்று ஏன் வருகிறது என்று மனதில் ஏற்பட்ட எண்ணத்துடன்தான் எல்லோரும் வீடு திரும்பினர்.

**– திருமதி காஞ்சனா சங்கரன்**



பத்து நாள் ப்ரம்மோத்சவத்தில், ஆறாவது நாள் யானை வாகனத்தில் மாதுரிஸகி ப்ரேமிக வரதன் உலா வரும் காட்சி.



'நந்தோத்ஸவம்' வைபவத்தில் 'உறியடி'க்காகக் காத்திருக்கும் பால், தயிர், வெண்ணெய் நிரம்பிய பானைகள்.

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 4

பிரம்ம சூத்ரம், உபநிஷத், பகவத் கீதை என்ற மூன்று கிரந்தங்களும் மோக்ஷத்திற்கு ஆசைப்படுகிறவர்கள் அவச்யமாக ஆஸ்ரயிக்க வேண்டிய கிரந்தங்கள் என்பது அனைவருக்கும் தெரியும். இவை மூன்றும் சேர்ந்துதான் பிரஸ்தான திரயம் என்று பிரஸித்தியாக அழைக்கப்படுகின்றது.

பகவத்பாதாச்சார்யாள் ''விவேக சூடாமணி'' என்ற வேதாந்த கிரந்தம் ஒன்று அருளியுள்ளார். விஷயம் அறிந்தவர்கள் பிரஸ்தான திரயத்தின் ஸாரமாகவே ''விவேக சூடாமணி'' அமைந்துள்ளதாக கூறுகின்றார்கள். இந்த கிரந்தத்தின் ஆரம்பத்திலேயே ஆச்சார்யாள் மனிதப் பிறவியும், மோக்ஷத்தில் ஆசையும், மஹா புருஷர்களின் ஸங்கமும், பல கோடி பிறவிகளில் செய்த புண்யத்தின் பலனாகவே கிடைக்கின்றது என்கின்றார். மஹா புருஷரின் ஸங்கம் என்பதை ஸத் ஸங்கம் என்றும் குருவின் ஸங்கம் என்றும் பொருள் கொள்ளலாம். நாம் ஸர்வதா பிரமாணமாக கொள்ளும் ஸ்ரீமத் பாகவதத்திலும் ஸாதுக்களின் ஸங்கத்தின் மஹிமையே சொல்லப்பட்டுள்ளது. ஆகவே அப்பேர்ப்பட்ட, அடைவதற்கு அரியதாக இருக்கக்கூடிய, ஸத் ஸங்கத்தையோ, குருநாதரையோ அடைந்த நாம், அதை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? அவச்யம் ஸத் ஸங்கத்தின் பலனை அடைய வேண்டும். அடைவது என்றால் என்ன? எப்படி? நாம் எப்பாடு பட்டாவது குருநாதரின் திருவடி நிழலிலேயே வாழ முயற்சிக்க வேண்டும். அப்படி வாழ்ந்தோமானால் வெகு விரைவில் பூரணமாகிவிடுவோம்.

ஒரு தாயாருக்கு குழந்தை ஒன்று பிறந்தது முதல் சலனமே இல்லாமல் இருந்தால், குழந்தைக்கு 'கோமா' நிலைமை போய் சலனம் வந்தால் தேவலாம் என்று நினைப்பாள். சலனம் வந்த பிறகு படுத்த படுக்கையாக இருந்தாலும் பரவாயில்லை, சிறிது பேசினால் போதும் என்பாள். பேச ஆரம்பித்தவுடன், சிறிது உட்கார்ந்தால் தேவலை என்பாள். உட்கார்ந்தவுடன் சிறிது நடந்தால் போதும் என்பாள். நடக்க ஆரம்பித்தவுடன் ஏதோ இரண்டெழுத்துக் கற்றுக் கொண்டால் தேவலை என்பாள். அதன் பிறகு நன்றாகப் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவாள். பிறகு உலகில் எல்லோரையும் போல் சம்பாதித்துக் கீர்த்தியுடன் விவாஹம் செய்து கொண்டு பிள்ளை குட்டிகளைப் பெற்றுக் கொண்டு குடித்தனம் நடத்த வேண்டும் என்று நினைப்பாள் அல்லவா? குழந்தை கோமா நிலைமையில் இருந்த பொழுது ஏதோ சலனம் ஏற்பட்டு உயிர் வந்தால் போதும் என்ற நினைப்பு எது வரைக்கும் வளர்ந்துவிட்டது என்பதை பார்த்தீர்களா? தாயாருக்குத் தன் குழந்தையிடம் இருக்கும் வாத்ஸல்யமே காரணமாக இருப்பதால் அவளுடைய ஆசைகள் நியாயம்தான்.

அது போல, மஹாத்மாக்களுக்கு ஜீவ கோடிகள் மேல் இருக்கும் கருணையும் இப்படித்தான் உள்ளது. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழும் அநேக ஜனங்களைப் பார்க்கும் பொழுது, ஒரு தரமாவது இவர்கள் ஹரி நாமம் சொல்ல மாட்டார்களா? ஒரு நாளாவது கோயிலுக்கு வந்து எம்பெருமானை ஸேவிக்கமாட்டார்களா? என்று ஏங்கு கின்றார்கள். அப்படி வந்தவர்களைப் பார்த்து 'ஏன் நிறைய கீர்த்தனம் பண்ணலாமே! நித்யமே கோயிலுக்கு வரலாமே!' என்று ஏங்குகின்றார்கள். அப்படி அவன் கீர்த்தனையும் செய்து நித்யமும் கோயிலுக்கு வர தொடங்கிவிட்டால் இன்னும் கொஞ்சம் சரீர சுத்தத்தோடு இதையெல்லாம் செய்யலாமே என்று ஏங்குகின்றார்கள். பிறகு சரீர சுத்தத்துடன் கொஞ்சம் கெட்ட சகவாஸத்தையும் தொலைத்து, நல்ல பழக்கங்களையும் நல்ல

சங்கத்தையும் கைக்கொள்ள மாட்டானா என்று ஏங்கு கின்றார்கள். பிறகு ஹ்ருதயத்தில் உள்ள காம க்ரோதாதிகளைத் தொலைத்து சுத்த ஹ்ருதயத்துடன் பக்தி பண்ணலாமே என்று ஏங்குகின்றார்கள். பிறகு பகவத் தர்சனத்துக்கு இவன் பாடுபட மாட்டானா என்று ஏங்குகின்றார்கள். நாம் பிறருடைய கஷ்டங்களுக்காக இரக்கப்படுகின்றோம் அல்லவா? அந்த இரக்கமே அவர்களுக்கு சௌக்யத்தை ஏற்படுத்தும். 'Mercy has got force'. அது போல, மஹாத்மாக்கள் நாம் திருத்த வேண்டும் என்றும், பகவத் பக்தி பண்ண வேண்டும் என்றும் தவிக்கிறார்களே அதற்குத்தான் கருணை என்று பெயர். காமக் குரோதாதிகளுடன் கூடிய நம்முடைய கருணைக்கே சக்தி இருக்குமானால் மஹாத்மாக்களின் கருணையைப் பற்றி கேட்க வேண்டுமா! அப்பேர்ப்பட்ட மஹாத்மாக்களின் கருணை யினாலேயே நாம் பூர்ணமாகி விடுவோம். அப்பேர்ப்பட்ட மஹாத்மாக்களின் ஸங்கத்தையே நாம் எப்பாடுபட்டாலும் அடைய வேண்டியது.

தொகுப்பு : முரளீதர தாஸன்

---

*உலகத்தில் எல்லோரும் என்னை விட ஏதோ ஒரு விதத்தில் பெரியவர்களாகவே எனக்குத் தோன்றுகிறது.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## அக்டோபர் 16 முதல் 21 வரை & 24, 25

சென்னை ஸ்ரீ ரமண கேந்திரம் சார்பில் ஸ்ரீ குருஜி சென்னை மயிலை ஆர்.ஆர். சபாவில் ஸ்ரீ ரமண மஹரிஷியின் 'அருணாசல அக்ஷர மணமாலை' - உபன்யாஸம் நிகழ்த்துவார்கள். நேரம் : மாலை 7 முதல் 8-30 வரை

❀ ❀ ❀

## அக்டோபர் 25 - புதன்கிழமை

<u>ஐப்பசி மாதம் - சுவாதி நட்சத்திரம்</u>

ஸ்ரீ குருஜியின் திரு நட்சத்திரம்

❀ ❀ ❀

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. Dis. 2032/95 | Regd. No. TN/MS/(S)1698

Single Copy Rs. 5/- | Annual Subs. Rs. 60/-

வேணு : 1 | அக்டோபர் 1995 | கானம் : 3


மதுரமுரளி மாத இதழிற்கு சந்தாதாரர்கள் வரவேற்கப் படுகிறார்கள். வருஷச் சந்தா ரூ.60/- தனிப் பிரதி ரூ.5/-

டிமாண்டு டிராப்டை 'குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

மதுரமுரளி
V. சங்கரன்,
5/3, MIG Flats,
பி.டி. ராஜன் ரோடு,
கே.கே. நகர், சென்னை 600 078

என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

மணியார்டர் மூலமும் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

மிஷன் சார்பில் "சாந்தீபனி குரு குலம்" என்ற டிரஸ்டின் கீழ் சாம வேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு. பாடசாலைக்கு வித்யார்த்திகளையும், 'மதுரமுரளி' இதழுக்கு சந்தாதாரர்களைச் சேர்த்தும், விளம்பரங்களை அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 095 and printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras 600 014. Editor : S. Sridhar